# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
Website: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 156/மா/2025
நாள் 21.05.2025

திரு .J.வேலாயுதம்,
திருச்சி --- முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையாளர்,
சூரமங்கலம் மண்டலம்,
சேலம் மாநகராட்சி --- எதிர் மனுதாரர்

திருச்சி மாவட்டம், முசிறி தாலுக்கா, புலி வலம் போஸ்ட், கோல்டன் சிட்டி கதவு எண்.2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு .J.வேலாயுதம் என்பவரின் 25.02.2025 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 28.02.2025 அன்று பெறப்பட்டு 156/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க் காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சி மாவட்டம், முசிறி தாலுக்கா, புலி வலம் போஸ்ட், கோல்டன் சிட்டி கதவு எண்.2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு .J.வேலாயுதம் என்பவர் 25.02.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

“எனது பெரியப்பா லேட் சச்சிதானந்தம் பிள்ளை வீட்டின் வரி விதிப்பு எண்.1034822ன் விபரம் (சேலம் மாநகராட்சி) சூரமங்கலம் வார்டு ஆபீஸ் , சேலம் பொது தகவல் அலுவலர் வசம் 19.12.2024ல் கேட்டும் அவர் ஒரு தகவலும் பதிலும் கொடுக்கவில்லை. தனது கடமையை செய்யவில்லை. ஆணையரும் கண்டுக் கொள்ளவில்லை. அலுவலக ரிக்கார்டுன்படி தகவல் உரிமை சட்டப்படி தகவல் கேட்டும் தெரிவிக்க மறுக்கிறார்கள்.

கெட்ட எண்ணத்துடன், சவாலாக, உள் நோக்கத்துடன், எதிர்பார்ப்புடன் தகவல் தெரிவிக்க மறுக்கிறார்கள்.

எனவே (சேலம் மாநகராட்சி) சூரமங்கலம் வார்டு ஆபீஸ் ஆணையின் பேரில் கடமையை செய்யாததால் வழக்கு தொடர பணிவுடன் கோருகிறேன். இது சம்மந்தமாக நகல் சம்மன் எனக்கு அனுப்ப கோருகிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரரின் பெரியப்பா லேட் சச்சிதானந்தம் பிள்ளை வீட்டின் வரி விதிப்பு எண்.1034822–ன் தொடர்பாக சேலம் மாநகராட்சி சூரமங்கலம் ஆணையரிடம் தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் கீழ் தகவல் கோரியும், சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் ஆணையர் தகவல் அளிக்க மறுப்பதாக தெரிவித்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

3. தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் தகவல் அளிக்க மறுக்கும் பட்சத்தில், மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் மேல்முறையீட்டு மனு அளிக்கவும், தகவல் ஆணையத்திடம் புகார் மனு அளிக்கவும், வழிவகை செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரரின் 25.02.2025 நாளிட்ட மனு மீது இம்முறை மன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை எடுக்க அவசியம் எழவில்லை என்று முடிவு செய்து அவ்வாறே இம்முறை மன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு மே திங்கள் 21 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு .J.வேலாயுதம்,
எண்.2, கோல்டன் சிட்டி,
புலிவலம் போஸ்ட்,
முசிறி தாலுக்கா,
திருச்சி மாவட்டம்–621 006.

2) உதவி ஆணையர்,
சூரமங்கலம் மண்டலம்,
சேலம் மாநகராட்சி,
சேலம்–5.

3) ஆணையர்,
சேலம் மாநகராட்சி,
சேலம்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

5) இணை இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.